# ஒரு பதிலைக் கொண்ட மூன்று கேள்விகள்

## (8:31-37)

ரோமருக்கு எழுதிய நிருபத்தின் உச்சகட்டம் என்று கருதப்படக்கூடிய, வல்லமைநிறைந்த சொல்லாற்றலுள்ள வசனப்பகுதிகளில் ஒன்றிற்கு நாம் வந்திருக்கிறோம்: ரோமர் 8:31-37. ஜான் R. W. ஸ்டாட் என்பவர், இந்தப் பகுதியில் "அப்போஸ்தலர், புதிய ஏற்பாட்டின் வேறு எவ்விடத்திலும் இதற்குச் சமமானதாக இராத வெகுவான உயரங்களில் சிறகடித்துப் பறக்கிறார்" என்று கூறினார்.[1] டக்ளஸ் J. மூ என்பவர், ரோமர் 8ன் கடைசிப்பகுதியை "தேவன் தமது மக்களுக்காகக் கொண்டுள்ள நித்திய உறுதிப்பாட்டின் பெரும் கொண்டாட்டம்" என்று அழைத்தார்.[2]

8ம் அதிகாரத்தின் முடிவு வசனங்களில், முதலில் நாம் மன்னிக்கப்பட்டவர்களுக்குத் தேவனுடைய பராமரிப்புப் பற்றிய அசைவற்ற உறுதிப்பாடுகள் மூன்றைக் கொண்டுள்ளோம் (வசனம் 28): தேவன் தமது பிள்ளைகளின் சார்பாகச் செயல்படுகிறார், அவர் சகலத்தையும் நன்மைக்கு ஏதுவாக நடப்பிக்கிறார், மற்றும் இதை அவர் தம்மீது அன்புகூருபவர்களுக்குச் செய்கிறார். அடுத்ததாக, நாம் தேவன் தமது நோக்கத்தைச் செயல்படுத்துதல் பற்றிய தவறாத முடிவுகள் மூன்றைக் கொண்டுள்ளோம் (வசனங்கள் 29, 30): கடந்தகாலத்தில், தேவன் முன்னறிந்து முன்குறித்தார்; நிகழ்காலத்தில் அவர் அழைத்து நீதிமான்களாக்குகிறார்; மற்றும் எதிர்காலத்தில் அவர் மகிமைப்படுத்துவார். கடைசியாக, நமது பாடத்திற்கான வேத வசனப்பகுதியில், தேவன் தமது மக்கள்மீது கொண்டுள்ள பரிவிரக்கம்பற்றிய மறக்க முடியாத கேள்விகள் மூன்றைக் கொண்டுள்ளோம்: "தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?" (வசனம் 31ஆ); "தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்?" (வசனம் 33அ); மற்றும் "கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?" (வசனம் 36அ). ரோமர் 8:31-37ல் பிற கேள்விகளும் காணப்படுகின்றன, ஆனால் எஞ்சிய எல்லாக் கேள்விகளும் இங்கு மேலே பட்டியலிடப்பட்ட மூன்று கேள்விகளுடன் தொடர்புடையவையாக உள்ளன.

நான் இந்தப் பாடத்தை, "ஒரு பதிலைக் கொண்ட மூன்று கேள்விகள்" என்று அழைக்கிறேன். அந்த "ஒரு பதில்" என்பது என்ன? வேத வசனப் பகுதியை நாம் படிக்கையில் அது சுட்டிக்காண்பிக்கப்படும்.

## *“நமக்கு விரோதமாயிருப்பவன் யார்” (8:31-32)*

*“இவைகளைக்குறித்து நாம் என்ன சொல்லுவோம்?” என்று கேட்பதைக் கொண்டு நமது வேதவசனப்பகுதி தொடங்குகிறது (வசனம் 31அ). வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், “நாம் கலந்துரையாடிக்கொண்டிருந்த விஷயங் களைப் பற்றி நாம் என்ன சொல்லுவோம்?”[3] உடனடியான சந்தர்ப்பப்பொருளில், நமது பலவீனங்களில் ஆவியானவரின் உதவி (வசனங்கள் 26, 27), தேவன் தம்மீது அன்புகூருபவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடப்பித்தல் (வசனம் 28), மற்றும் தேவன் தமது நித்திய நோக்கங்களையும் திட்டங்களையும் செயல் படுத்துதல் (வசனங்கள் 29, 30) ஆகிய தலைப்புகள் உள்ளடங்குகின்றன. “இவை யாவற்றையும் சிந்தையில் கொண்டநிலையில், நாம் என்ன சொல்லுவோம்?”* (NEB). *நாம் அடைய வேண்டிய முடிவு (அல்லது முடிவுகள்) என்ன?*

*பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தில் அடிக்கடி பயன்படுத்திய அணுகுமுறை ஒன்றைக்கொண்டு பதில் அளித்தார்: மறைமுகமான பதில்களைக் கொண்டுள்ள கேள்விகளைக் கேட்டல். இதை நாம், “சொல்திறன் மிக்க கேள்விகள்” என்று அழைக்கிறோம். இவற்றைப் பவுல், ஒரு வாய்மொழிபதிலை வரவழைப்பதற்காகக் கேட்கவில்லை, ஆனால் சத்தியங்களை மனதில் பதியும் வகையில் எடுத்துரைக்கவும் தமது வாசகர்கள் சிந்திக்கக் காரணமாகும் வகையில் அவர்களை ஈடுபாடு கொள்ளச் செய்யவுமே அவர் இவ்வாறு கேட்டார்.*

### *நம்முடைய பட்சத்தில் இருப்பவர் யார்?*

*பவுல் தமது தொடக்கக் கேள்விக்கு இன்னொரு கேள்வியைக் கொண்டு பதில் அளித்தார், இது நான் சித்தரிக்க விரும்பும் மூன்றில் முதலா வதாக உள்ளது: “தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால்[4] நமக்கு விரோதமா யிருப்பவன் யார்?” (வசனம் 31ஆ). நாம் அந்தக் கேள்வியின் கடைசிப் பகுதியை மாத்திரம் - “நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?” - கொண் டிருந்தால் நாம் பல பதில்களைத் தரலாம். பவுல் தமக்கு “விரோத மாக” இருந்த எண்ணற்றவர்களைப் பற்றிப் பட்டியல் இட்டிருக்கக்கூடும், அதில் விசுவாசியாத குடும்பத்தினர், பொறாமை கொண்ட யூதர்கள், புறதெய்வ வணக்கக்காரராயிருந்து கலகம் செய்தவர்கள், பரிவிரக்கமற்ற ரோமத்தலைவர்கள் மற்றும் சாத்தான் ஆகியோர் உள்ளடங்கியிருப்பார்கள். இயேசுவுக்காக வாழ்வதற்கான உங்கள் முயற்சிகளை எதிர்ப்பவர்களைக்கொண்ட உங்கள் சொந்தப் பட்டியலை நீங்கள் தயாரிக்கலாம்.*

இருப்பினும், இந்தக் கேள்வியின் முதல் பாகம் கூட்டப்படும்போது, *விசாரணையின் தொனி மாறுகிறது: “தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?” இந்த வாக்கியத்தில், “ஆல்” என்பது “இருப்பதால்” என்று அர்த்தப்படுகிறது: “தேவன் நம் பட்சத்தில் இருப்பதால் …” “நம் பட்சத்தில்” என்பது “நம் பகுதியில்” என்று அர்த்தப்படுகிறது* (McCord). தேவன் நம் பக்கத்தில் இருப்பதால், *வெற்றிநிறைந்த வகையில்* யார் நம்மை *எதிர்க்கக் கூடும்? தேவன் நம் பட்சத்தில் இருப்பதால், யார் நம்மை எதிர்த்து மேற் கொள்ளக்கூடும்?* **“எவரொருவரும் இல்லை!”** *என்பதே மறைமுகமான பதிலாக உள்ளது. சங்கீதக்காரர், “கர்த்தர் என்பட்சத்தில் இருக்கிறார், நான் பயப்படேன்; மனுஷன் எனக்கு என்ன செய்வான்?” என்று எழுதினார் (சங்கீதம் 118:6). மற்ற இரண்டு திறவுகோல் கேள்விகளுக்கு நாம் வரும்போது, அந்தப் பதிலை*

*நினைவில் வைத்திருங்கள்:* ***"எவரொருவரும் இல்லை!"***

### தேவன் என்ன செய்தார்?

தேவன் "நம்முடைய பட்சத்தில் இருக்கிறார்" என்று கூறியதுடன் பவுல் நிறுத்திக் கொள்ளவில்லை; விஷயம் இப்படியிருக்கிறது என்பதற்கு அவர் சாட்சியம் கொடுத்தார். 32ம் வசனமானது தேவனைப்பற்றிய இந்த விவரிப்புடன் தொடங்குகிறது: "தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல் லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர்[5]" (வசனம் 32அ). "பாராமல்" என்று மொழிபெயர்க்கப்பட்ட (*pheidomai* என்பதிலிருந்து வந்துள்ள) கிரேக்க வார்த்தையானது, செப்துவஜிந்த்[6] வேதாகமத்தில், ஆபிரகாம் என்ற முற்பிதா தனது மகனைப் பலியிடத் தமது மனப்பூர்வமான சம்மதத்தைக் காண்பித்தபின்பு, அவரைத் தேவன் பாராட்டியபோது கூறிய வார்த்தைகளில் பயன்படுத்தப் பட்டுள்ளது: "... நீ அவனை உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் [*pheidomai*] எனக்காக ஒப்புக்கொடுத்தபடியினால் நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன்" (ஆதியாகமம் 22:12). ஆபிரகாம் எதைச் செய்ய மனப்பூர்வமாய்ச் *சம்மதித்திருந்தாரோ,* அதையே தேவன் *செய்தார்.* தேவன் தமது ஒரே பேறான குமாரனென்றும் பாராமல் அவரை [இயேசுவை] நமக்காகக் கையளித்தார்.[7]

மாறாக, அவர் கொல்லப்படும்படி "அவரைக் கையளித்தார்." தேவன் அதை ஏன் செய்தார்? அவர் அதை "நமக்காக" செய்தார்! ஆக்டேவியஸ் வின்ஸ்கோ என்பவர், "இயேசுவை மரிக்கும்படி ஒப்புக்கொடுத்தவர் யார்? பணத்துக்காக யூதாஸ் அல்ல; பயத்துக்காகப் பிலாத்து அல்ல; பகைமைக்காக யூதர்கள் அல்ல; - ஆனால் பிதாவே அன்பிற்காகப் அதைச் செய்தார்!"[8] "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை ... தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் [அதாவது நம்மில்!] அன்புகூர்ந்தார்" (யோவான் 3:16).

G. C. புரூவெர் என்பவர் ஒருமுறை, கெத்செமெனே தோட்டத்தில் தேவ னிடத்தில், "என் பிதாவே, கூடுமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக் கடவது" (மத்தேயு 26:39) என்று விண்ணப்பிக்கும் இயேசுவை சித்தரித்தார். பின்பு (மனித உருவகத்தைத்[9] தாம் பயன்படுத்தியமைக்காக மன்னிப்புக் கேட்ட பின்பு), சகோதரர் புரூவெர் பின்வரும் காட்சியைக் கற்பனை செய்தார்:

> கெத்செமெனேயிலிருந்து புலம்பி அழும் கதறுதல் பரலோகத்திற்கு மேலேறிச் சென்றது, மற்றும் தூதர்கள் தங்கள் பாடல்களை நிறுத்தி நேர்நிலையில் நின்றனர். அவர்கள் பிதாவைக் கண்ணோக்கி அவரது கட்டளையை எதிர்பார்த்திருந்ததை நான் காண்கிறேன். பிதாவானவர் அண்டத்தின் அரியணையில் வீற்றிருக்க தூதர்களும் பிரதான தூதர்களும் அவரைச் சுற்றிச்சூழ்ந்திருந்தனர். அவர் கதறுதலைக் கேட்கிறார் மற்றும் தமது பரிசுத்தபிள்ளை, தமது பாதபடியாகிய மண்ணில் முகங்குப்புற விழுந்து கிடப்பதைக் கீழே கண்ணோக்குகிறார். மாபெரும் பிதாவினுடைய மார்பானது உணர்வினால் மேலெழுந்து பின்விழுவதை நான் காண்கிறேன். மாபெரும் முகவாய் நடுங்குவதையும் கண்ணீர் புறப்பட்டுக் கன்னங் களின் வழியே கீழ் ஓடத்தொடங்குவதையும் நான் காண்கிறேன். பிதா வானவர் நிச்சயமாகவே அந்தப் பாத்திரத்தை நீக்கிப்போடுவார்! அவர் மறுபடியும் கண்ணோக்கி, மூர்க்கமும் உணர்வற்ற நிலையும் கொண்டிருந்த

கும்பலானது பசித்த மிருகம் தன் இரையைத் தேடி மறைவாகச் செல்வது போல், வஞ்சகமாகக் குன்றின்மீது ஊர்ந்து ஏறிச்செல்லுவதைக் காண்கிறார். பெரும்வேதனையின் கதறுதல் திரும்பவும் பரலோகத்தை ஊடுருவுகிறது மற்றும் தூதர்கள் அழுகின்றனர். இப்போது பிதா குமாரனை இரட்சிப்பாரா?

பிதாவானவர் திரும்பவும் கண்ணோக்குகிறார், அவருக்கு முன்பாக இன்னொரு காட்சி எழுகிறது. அவர் காலங்களினூடே கீழே கண்ணோக்கி, தங்கள் வாழ்வின் குறுக்கே பாவச்சுமைகளுக்குக் கீழே தள்ளாடும் பல லட்சக்கணக்கான மக்களின் குழுவையும் அவர்களின் கடின முயற்சிகளையும் காண்கிறார். அவர்கள் இரக்கத்திற்காகக் கதறுவதை அவர் கேட்கிறார். அவர்கள் முறிந்துபோன மற்றும் இரத்தம் சிந்தும் இருதயங்களுடன் வெளிச்சத்திற்காக ஏங்கித் திறந்திருந்த கல்லறைகளின் அருகில் நிற்பதை அவர் காண்கிறார். அவர் என்னையும் உங்களையும் நமது கண்கள் அழுததினால் வீங்கியிருக்க, நமது ஆத்துமாக்கள் பாவத்தினால் கறைப்பட்டிருக்கக் கண்டார். நித்திய சாபத்தின் விளிம்பினூடே நாம் யாவரும் பயணம் செய்வதை அவர் கண்டார், மற்றும் அவர் நம்மீது அன்புகூர்ந்தார், அவரது நாமம் ஆசீர்வதிக்கப்படுவதாக; அவர் நம்மை மீட்கும்படிக்கு நம்மீது அன்புகூர்ந்தார். அவர் பின்வரும் செய்தியுடன் ஒரு தூதனைப் பூமிக்கு அனுப்புவதை நான் காண்கிறேன்:

"என் குமாரனே, அது சாத்தியமல்ல. நீர் இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணாதிருந்தால், பூமியில் உள்ள குறைவுபட்டுள்ள என் பிள்ளைகள் எல்லாரும் என்றென்றைக்கும் இழந்துபோகப்படுவார்கள்.'' பின்பு தூதன் அவருக்கு ஊழியஞ்செய்து, அவருக்குப் பலம் அளித்து, அவரது பயத்தை நீக்குகிறார். "அவரது பயத்தில் அவரது ஜெபம் கேட்கப்பட்டது" ([எபிரெயர்] 5:7-9).[10]

*இந்த பூமியின் பிரச்சனைகள் உங்களைக் கீழே தள்ளும்போது, தேவன் உங்கள்மீது அன்புகூருகிறார் என்பதில் நீங்கள் எப்போதாவது சந்தேகம் கொள்கிறீர்களா? உங்கள் கண்களை உங்கள் இடர்ப்பாடுகளிலிருந்து எடுத்து, அவற்றைச் சிலுவையை நோக்கிக் கவனம்குவிக்கச் செய்யுங்கள். கல்வாரியில் கிறிஸ்துவின் பெரும்வேதனையை [மனதில்] சித்தரியுங்கள். பின்பு பின்வரும் சத்தியத்தைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள்: தேவன் உங்களுக்கு ஆம் என்று சொல்லுவதற்காகத் தமது குமாரனுக்கு இல்லை என்று சொல்லுமளவுக்கு அவர் உங்கள்மீது அதிகமாய் அன்புகூர்ந்தார். சிலுவையானது பின்வரும் கருத்தைச் சந்தேகத்திற்கு இடமின்றி விட்டுச்செல்கிறது: தேவன் உங்கள்மீது அன்புகூருகிறார்!*

**தேவன் என்ன செய்வார்?**

*இப்போது, ரோமர் 8:32ஐ முழுமையான வகையில் கண்ணோக்குங்கள்: "தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட[11] மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?'' கொள்கையானது எளிதான ஒன்றாக உள்ளது: பெரிதானவற்றைக் கொடுத்த ஒருவர் குறைவானவற்றை நிச்சயமாகவே பகிர்ந்தளிப்பார். ஒரு மனிதர் உங்களுக்கு ஒரு நூறு ரூபாயைக் கொடுத்தார் என்றால், உங்களுக்கு ஒரு இருபத்தி ஐந்து பைசா தேவைப்பட்டால், அவர் அதை உங்களுக்குக் கொடுக்க மறுக்கமாட்டார் என்பது நிச்சயம். தேவன் ஏற்கனவே*

நமக்கு மாபெரும் கொடையை - தமது குமாரனை - கொடுத்திருக்கிறார், எனவே குறைவான கொடைகளைக் கொடுக்க அவர் தயங்க மாட்டார்.

இவ்வசனத்தில் உள்ள "எல்லாவற்றையும்" என்பது நாம் *விரும்புகிற* எல்லா வற்றையும் குறிப்பதில்லை. (பெரும்பாலும் நாம் விரும்புகின்றவை நமக்கு நல்லவையாக இருப்பதில்லை.) மாறாக, அது உண்மையான தேவைகளைக் குறிக்கிறது. பிலிப்பியருக்குப் பவுல், "என் தேவன் தம்முடைய ஐசுவரி யத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்" என்று கூறினார் (பிலிப்பியர் 4:19). இது சரீரப்பிரகாரமான தேவைகளை உள்ளடக்குகிறது. இயேசு, "முதலாவது தேவனுடைய இராஜ் யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல் லாம் [வாழ்வின் அத்தியாவசியத் தேவைகளெல்லாம்] உங்களுக்குக் கூடக்கொடுக்கப்படும்" என்று கூறினார் (மத்தேயு 6:33). எல்லாவற்றிற்கும் மேலாக, இது ஆவிக்குரிய தேவைகளைச் சூழ்வதாக உள்ளது: நாம் இருக்க வேண்டிய பிரகாரம் இருப்பதற்கும் நாம் செய்ய வேண்டியவற்றைச் செய் வதற்கும் நமக்குத் தேவையானவை - அதாவது, நமது வாழ்வில் தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்ற நமக்குத் தேவையான விஷயங்கள்.

## "நம்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்?" (8:33, 34)

அது நம்மை, நான் முக்கியத்துவப்படுத்த விரும்புகிற இரண்டாவது கேள்வி யினிடத்தில் நம்மைக் கொண்டுவருகிறது: "தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்?" (வசனம் 33அ). "தெரிந்துகொண்டவர்கள்" என்பது (*ek* ["வெளியே"] கூட்டல் *lego* ["கூற"] என்ற சொற்களால் ஆகிய) *eklektos* என்ற வார்த்தையிலிருந்து வருகிறது, இது "பொறுக்கி எடுக்கப்பட்டவர்கள்" அல்லது "தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள்" என்று அர்த்தப்படுகிறது.[12] "தெரிந்து கொண்டவர்கள்" தேவனால் முன்னறியப்பட்டு, முன்குறிக்கப்பட்டு, அழைக்கப் பட்டு, நீதிமான்களாக்கப்பட்டவர்களாக உள்ளனர் (வசனங்கள் 29, 30). SEB வேதாகமத்தில், "God's chosen people" ("தேவனால் தேர்ந்துகொள்ளப்பட்ட மக்கள்") என்று உள்ளது.

"குற்றஞ்சாட்டுதல்" என்பது (*en* ["உள்ளே"] மற்றும் *kaleo* ["அழைக்க"] என்ற சொற்களை இணைத்துப் பெற்ற) *enklema* என்பதிலிருந்து வருகிறது. இது, இன்னொருவருக்கு எதிராகக் குற்றம்சாட்டுதல் அல்லது ஒரு குற்றச்சாட்டைக் கொண்டுவருதல் என்பதைக் குறிக்கிறது.[13] இவ்விடத்தில் பவுல் தாம் இந்நிருபத்தில் அடிக்கடி பயன்படுத்திய நீதிமன்றத்தின் உருவகத்தைத் திருப்பிப்போட்டார். இது 34ம் வசனத்தின் முதல்பகுதியிலுள்ள கேள்வியினால் மறுவலிவூட்டப்படுகிறது: "ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்?" "ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தல்" என்பது *kata* என்ற சொல்லினால் பலப்படுத்தப்பட்ட *krino* ("நியாயந்தீர்க்க") என்பதிலிருந்து வரும் *katakrino* என்ற சொல்லாக உள்ளது.

33ம் வசனத்தின் தொடக்கத்திலுள்ள கேள்வியை நாம் தனிமைப்படுத்த வேண்டியிருந்தால், நாம் நம்மைக் குற்றம்சாட்டுகிற பலரைப் பட்டியலிட முடியும். நம்மை மிகவும் நன்றாக அறிந்துள்ளவர்கள், நாம் பூரணப்பட்டவர்கள் அல்ல என்பதை அறிந்துள்ளனர், மற்றும் நம்மை விரும்பாதவர்கள் நமது தவறுகளைச் சுட்டிக்காண்பிக்க பெரும்விருப்பம் உள்ளவர்களாக இருக்கின்றனர். நமது பட்டியலில் நமது சொந்த இருதயங்களும் (1 யோவான் 3:20, 21ஐக் காணவும்)

*நமது சொந்த மனச்சாட்சிகளும் (ரோமர் 2:15ஐக் காணவும்) உள்ளடக்கப்படக் கூடும். இப்பட்டியலானது பிசாசானவனைப் பற்றிய குறிப்பிடுதல் இல்லாத நிலையில் முடிக்கப்படாததாக இருக்கும். சாத்தான், "இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ்சுமத்தும் பொருட்டு அவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன்" என்று அழைக்கப் படுகிறான் (வெளிப்படுத்தின விசேஷம் 12:10; சகரியா 3:1ஐக் காணவும்).*

### ***தேவனைப் பற்றிய விஷயம் என்ன?***

*இருப்பினும், பவுல் "தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டு கிறவன் யார்?" என்ற கேள்வியுடன் நிறுத்திவிடவில்லை. அதைத் தொடர்ந்து அவர் இன்னொரு கேள்வியைக் கேட்டார்: "தேவனே அவர்களை நீதிமானாக்கு கிறவர். ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்?" (8:33, 34அ). தேவன் நம்மை நீதிமான்களாக்கி, நமது பாவங்களை மன்னித்து, நாம் ஒருக்காலும் பாவஞ்செய் திருந்ததில்லை "என்பது போன்று" நம்மை நடத்துகிறார் என்றால், அந்தப் பழைய பாவங்களைக் கொண்டுவந்து அவற்றைக் கொண்டு நம்மீது குற்றம்சுமத்த யாரால் முடியும்? "ஒரே பதில்" உங்களுக்கு நினைவில் உள்ளதா? மறுபடியு மாக, **"ஒருவரும் இல்லை!"** என்பதே மறைமுகமான பதிலாக உள்ளது.*

### ***இயேசுவைப் பற்றிய விஷயம் என்ன?***

*"ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்?" என்று கேட்டபின்பு பவுல், "கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே" என்று கூறினார் (வசனம் 34). "புதிய ஏற்பாட்டின் பழைய கிரேக்கக் கையெழுத்துப் பிரதிகளில் இந்த நிறுத்தற்குறிகளே இல்லை என்பதால், 33 மற்றும் 34ம் வசனங்களிலுள்ள நிறுத்தற்குறிகளினிமித்தம் கல்வியாளர்கள் போராடுகின்றனர்."[14] பல்வேறு மொழிபெயர்ப்புகளை ஆய்வுசெய்து பாருங்கள், நீங்கள் பலதரப்பான தரவழைப்புகளைக் கண்டறிவீர்கள். 33 மற்றும் 34ம் வசனங்களின் மாறுபட்ட பிரிவுகள் கேள்விகளாகவும், கூற்றுகளாகவும், மற்றும் மறுப்புரைகளாகவும்கூட முடிகின்றன.*

*34ம் வசனம் எவ்விதமாக நிறுத்தற்குறிகள் இடப்பட்டிருந்தாலும், அடிப்படைக்கருத்து ஒரேமாதிரியானதாகவே உள்ளது. நம்மை ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்க உரிமைகொண்டுள்ளவர் இயேசு கிறிஸ்து ஒருவரே, அவர் ஒரு நாளிலே மனிதகுலம் முழுவதையும் நியாயந்தீர்ப்பார் (நடபடிகள் 17:31ஐக் காணவும்). ஜிம் மெக்கைகன் என்பவர், "யாரேனும் ஒருவர் நியாயத்தீர்ப்பு எல்லாவற்றிற்கும் ராஜரீகமான கர்த்தராக இருப்பது போன்று கண்ணோக்கில் அகலமாக அடியெடுத்து வைத்து வந்தால், அவரது கைகளையும் கால்களையும் விலாவையும் சோதித்துப் பாருங்கள். அவர் [அவ்விடங்களில்] காயப்படாது இருந்தால், அவரைப் புறக்கணித்து விடுங்கள்!" என்று எழுதினார்.[15] இயேசு தம்மைப் புறக்கணிப்பவர்களை ஒரு நாளில், ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பார் (மத்தேயு 7:21-23; 25:31, 32, 41, 46; 2 கொரிந்தியர் 5:10ஐக் காணவும்) - ஆனால் அவர் விசுவாசம் நிறைந்தவர்களை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கமாட்டார் என்பதற்கு அவரே பல ஆதாரங்களைக் கொடுத்துள்ளார். ரோமர் 8:34ன்படி, இயேசு செய்துள்ளவற்றையும் செய்துகொண்டு இருப்பவற்றையும் கவனி*

*யுங்கள்:*

- *அவர் நமது பாவங்களின் குற்றத்தைத் தம்மீது சுமந்து நமக்காக "மரித்தார்" (1 கொரிந்தியர் 15:3ஐக் காணவும்).*
- *அவரையும் அவரது பலியையும் தேவன் ஏற்றுக்கொண்டார் என்பதற்கும் (ரோமர் 1:5ஐக் காணவும்), நமது சொந்த உயிர்த் தெழுதலுக்கு உத்தரவாதமாக இருப்பதற்கும் (1 கொரிந்தியர் 15:20ஐக் காணவும்). நிரூபணமாக, அவர் மரித்தோரிலிருந்து "உயிர்ப்பிக்கப்"பட்டார்.*
- *அவர் தேவனிடத்திற்கு எழுந்தருளிச் சென்றார் மற்றும் இப்போது "தேவனுடைய வலது பாரிசத்தில்" (சங்கீதம் 110:1; நடபடிகள் 2:33, 34ஐக் காணவும்), அதிகாரமுள்ள இடத்தில் (மத்தேயு 28:18) அமர்ந்திருக்கிறார்.*
- *இதன்பின்பு நமது கலந்துரையாடலில் திறவுகோல் கருத்து வருகிறது: அவர் "நமக்காக வேண்டுதல் செய்கிறார்" (எபிரெயர் 4:14-16; 7:25). நாம் 8:26ஐப் பற்றிய நமது படிப்பில், "வேண்டுதல் செய்தல்" என்ற வார்த்தையைப் பற்றிப் பேசினோம்; அது இன்னொருவர் சார்பாக வேண்டுகோள் விடுத்தல், இறைஞ்சுதல் என்பதைக் குறிக்கிறது என்று நாம் குறிப்பிட்டோம். 8:34ல்* NEB *வேதாகமத்தில்,* "Christ ... is at God's right hand, and ... pleads our cause" *என்றுள்ளது.*

*பவுலின் நீதிமன்ற அறைபற்றிய உருவகத்தைச் சிந்தையில் வைத்துக்கொள் ளுங்கள். எனது கற்பனையில், சாத்தான் தேவனுடைய அரியணைக்கு முன்பாக நின்றுகொண்டு, டேவிட் ரோப்பராகிய எனது பல பாவங்கள் மற்றும் குறைவுகள் ஆகியவற்றைப் பட்டியல் இட்டுக்கொண்டிருப்பதை நான் காண்கிறேன். பின்பு நான் இயேசுவைக் காண்கிறேன். அவர் என் பக்கமாக வந்து தனது கையை என் தோள்கள்மீது வைக்கிறார். அவர் பிதாவினிடத்தில், "இவர் என் சகோதரர்" என்று கூறுகிறார். "நான் இவருக்காக மரித்தேன். இவரது பாவங்களுக்கு நான் கிரயம் செலுத்திவிட்டேன், மற்றும் அவை என் இரத்தத்தால் கழுவப்பட்டு விட்டன. அவர் நீதிமானாக்கப்பட்டு, 'குற்றமற்றவர்!' என்று அறிவிக்கப்பட்டிருக்கிறார்." சாத்தான், தொங்கிய முகத்துடன், தலைகவிழ்ந்து, தோல்வியுற்றவனாகப் புறம்பே நடந்து செல்வதை நான் சித்திரிக்கிறேன் - ஏனென்றால் இயேசு எனக்காக வேண்டுதல் செய்ய மனவிருப்பமாயிருந்தார்.*

*நம்மீது ஒரு குற்றம் சுமத்தப்பட்டு நாம் நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டி யிருந்ததென்றால், இருப்பவர்களிலேயே மிகச்சிறந்த வழக்கறிஞரை நமக்காக வாதாடும்படி அமர்த்துவதற்கு நாம் விரும்புவோம் - ஆனால் நம்மில் பலருக்கு அவ்வகையான தற்காப்பு வாதம் செய்பவரை அமர்த்தத் தேவையான நிதிகள் இருப்பதில்லை. நம்மால் அமர்த்த முடிந்த வழக்கறிஞர் நமது குற்றமற்ற தன்மையை நிரூபிக்கக் கூடியவராக இருப்பார் என்ற நம்பிக்கையில், ஆனால் விளைவைப் பற்றிய உத்தரவாதம் எதுவுமின்றி, நாம் நீதிமன்ற அறைக்குள் செல்லு வோம். (நீங்கள் இவ்விதமாகச் சென்றிருந்தால், அது எவ்வளவு பயமுறுத்தக் கூடியதாக இருக்கும் என்று நீங்கள் அறிவீர்கள்.) ஆவிக்குரிய மட்டத்தில்*

*நாம் இந்த அண்டத்திலுள்ள மிகச்சிறந்த வழக்கறிஞரைக் கொண்டுள்ளோம் என்பதை உணர்ந்தறிதல் எவ்வளவு ஆச்சரியமானதாக உள்ளது: இயேசு கிறிஸ்து நமக்காக வேண்டுதல் செய்கிறார்! மேலும் அவர் - நம்மீது அன்புகூருவதால் மாத்திரம் - "இலவசமாக" வாதாடுபவராக இருக்கிறார்! அவர் தமது வாதத்தில் வெற்றிகொள்வார் என்று நாம் அறிந்திருக்கிறோம்! "குற்றஞ்சாட்டுகிறவன் யார்?" என்ற கேள்விக்கு, இயேசுவின் நிமித்தம், **"எவரொருவரும் இல்லை!"** என்பதே பதிலாக உள்ளது.*

## *"நம்மைப் பிரிப்பவன் யார்?" (8:35-37)*

*அது நம்மை நான் வலியுறுத்த விரும்புகிற மூன்றாவது கேள்வியினிடத்தில் கொண்டுவருகிறது: "கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்[16]?" (வசனம் 36அ). சந்தர்ப்பப்பொருளில், "கிறிஸ்துவின் அன்பு" என்பது கிறிஸ்து நமக்காகக் கொண்டுள்ள அன்பைக் குறிக்கிறது.*

*பவுல் இந்தக் கேள்வியைக் கேட்ட பின்பு, தமது நாட்களில் கிறிஸ்தவர்கள் மத்தியில் மேலோங்கியிருந்த பிரச்சனைகளைப் பட்டியலிட்டார்: " 'உமது நிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப்போல எண்ணப்படுகிறோம்' என்று எழுதியிருக்கிறபடி நேரிட்டாலும், கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ?" (வசனங்கள் 35, 36). இவ்வசனங்களைப் பற்றி நாம் 8:35-39ன் மீதான, "பரிசுத்த வேதவசனங்களின் மேட்டர்ஹார்ன்" என்ற பாடத்தில் கலந்துரையாடுவோம். இவ்விடத்தில் நான் பின்வரும் ஒரு கருத்தைமாத்திரம் ஏற்படுத்த விரும்புகிறேன்: உங்கள் வாழ்வில் துன்பங்கள் வரும்போது, அது தேவன் உங்களைக் கைவிட்டு விட்டார் என்று அர்த்தப்படுவதில்லை. அவ்வாறு உணர்வது சுலபமாக உள்ளது, அல்லவா? பிரச்சனைகள் குவிகின்றன, இடர்ப்பாடுகள் நம்மை மூழ்கடிக்கின்றன, மற்றும் கர்த்தர் இன்னமும் நம்மீது அன்புகூருகிறாரா என்று நாம் வியப்படைகிறோம். செயல்விளைவில், "ஆம், அவர் அன்புகூருகிறார்!" என்பதே பவுலின் பதிலாக உள்ளது. 37ம் வசனத்தைக் கவனியுங்கள்: "இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே."*

*ஃபிரிட்ஸ் ரைடெனர் என்பவர், "உபத்திரவத்திலிருந்து தப்பித்தல் என்பதை வேதாகமம் வாக்களிப்பதில்லை. அது அச்செயலைச் செய்யு மென்றால், ஒவ்வொருவரும் - விபத்துகள், இடர்பாடுகள், மாரடைப்புகள், புற்றுநோய் ஆகியவற்றைத் தவிர்ப்பதற்காகவே - கிறிஸ்தவராகி இருப்பார்கள்"[17] என்று எழுதினார். (வேறுவார்த்தைகளில் கூறுவதென்றால், மக்கள் தவறான காரணங்களுக்காகக் கிறிஸ்தவர்களாக இருக்க விரும்புவார்கள்.) என்ன நடந்தாலும் தேவன் தொடர்ந்து நம்மீது அன்புகூருவார் மற்றும் இறுதியில் சகலமும் நமது நன்மைக்கு ஏதுவாக நடக்கும்படி தேவன் செயல்படுவார் என்று வேதாகமம் வாக்களிக்கிறது (வசனம் 28). நான் வாழும் பகுதியிலுள்ள தொலைக்காட்சி நிலையங்கள், திருமணம் செய்து கர்ப்பமாக இருந்த இளம்பெண் ஒருத்தி மிகக்கொடிய விபத்தில் சிக்கியது பற்றிய நிகழ்ச்சியொன்றைச் சமீபத்தில் காட்சிப்படுத்தியது. அவளது குழந்தை அவளது உடலிலிருந்து துண்டிக்கப்பட வேண்டியதாக இருந்தது. அவளது திருமணத்தையும் அவளது சவ அடக்கத்*

*தையும் நிகழ்த்தியிருந்த பிரசங்கியார் தொலைக்காட்சி நிகழ்ச்சிக்காகப் பேட்டிகாணப்பட்டார். செய்தி அறிவிப்பாளர், "இதைப்பற்றி நாம் எப்படி எந்தக் கருத்தையாவது/அர்த்தத்தையாவது ஏற்படுத்த முடியும்?" என்று கேட்டார். பிரசங்கியார், "இது [அவளது] வரலாற்றின் முடிவல்ல" என்று பதில் அளித்தார்.*[18] *தேவன்மீது விசுவாசமாக இருக்கும் அவரது பிள்ளை ஒவ்வொருவருக்கும், துன்பம் என்பது ஒருக்காலும் "[அவர்களின்] வரலாற்று முடிவாக" இருப்பதில்லை. என்ன நடந்தாலும் தேவன் நம்மீது அன்புகூருகிறார் என்பதே வரலாற்றின் முடிவாக உள்ளது.*

*இவ்வாறாக நாம் நமது மூன்றாவது கேள்வியைப் பெறுகிறோம்: "கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?" மற்றும் நாம் அதே மறைமுகமான பதிலைப் பெறுகிறோம்:* **"எவரொருவரும் இல்லை!"** *இத்துடன் நாம்* **"ஏதொன்றும் இல்லை!"** *என்பதையும் கூட்ட முடியும்.*

## *முடிவுரை*

*மூன்று திறவுகோல் கேள்விகள் முன்வைக்கப்பட்டுள்ளன: "நமக்கு விரோத மாயிருப்பவன் யார்?"; "நம்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்?"; "நம்மைப் பிரிப்பவன் யார்?" இந்தக் கேள்விகள் மூன்றிற்குமே ஒரே பதில் உண்மை யானதாக உள்ளது:* **"எவரொருவரும் இல்லை!"** *இன்னும் நீங்கள் தேவனுடைய பிள்ளையாக இராவிட்டால், இது அவரது அன்பினால் நீங்கள் சூழப்படும்படி, உங்களை நம்பிக்கையுள்ள கீழ்ப்படிதலில் நீங்கள் அவரிடத்தில் வரும்படி ஆக்குகிறதா (எபிரெயர் 11:6; கலாத்தியர் 3:26, 27)?*

*அது உங்களை ஊக்குவிக்காவிட்டால், கடைசிக் கேள்வியொன்றை ஆழ்ந்து சிந்தியுங்கள், இதுவும் அதே பதிலைக் கொண்டுள்ளது:* <u>*கிறிஸ்துவையும் அவரது வழியையும் ஏற்றுக்கொள்ளாமல் யார் இரட்சிக்கப்பட முடியும்?*</u> *மீண்டுமாக,* **"எவரொருவரும் இல்லை!"** *என்பதே பதிலாக உள்ளது. நீங்கள் கர்த்தரிடத்தில் வரவேண்டியிருந்தால், அதை உடனே செய்யும்படி உங்களை வேண்டி, கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன்.*

## பிரசங்கியார்கள் மற்றும் போதகர்களுக்கான குறிப்புகள்

*"ஒரு வெற்றியின் பாடல்" அல்லது "தேவன் தம் மக்கள்மீது கொண்டுள்ள அன்பு" என்பது இந்தப் பாடத்திற்கான இன்னொரு தலைப்பாக இருக்கலாம்.*

---

*குறிப்புகள்*

[1]John R. W. Stott, *The Message of Romans: God's Good News for the World,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994), 246. [2]Douglas J. Moo, *Romans,* The NIV Application Commentary (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 2000), 281. [3]*சில எழுத்தாளர்கள், பவுல் இந்த இடத்தில் இந்நிருபம் முழுவதையும் தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்றும், சிலர் இந்த இடத்தில் அவர் 5ம் அதிகாரத்தைத் தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்றும் மற்றவர்கள், இந்த இடத்தில் அவர் 8ம் அதிகாரத்தைத் தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்றும் நம்புகின்றனர்.* [4]*நமது*

வேதவசனப்பகுதி முழுவதிலும், "நமக்கு" என்பது உண்மையுள்ள கிறிஸ்தவர் களைக் குறிப்பதாயிருக்கிறது. [5]ஒரு கருத்தமைவில் கிறிஸ்து எல்லாருக்காகவும் மரித்தார்; ஆனால் இன்னொரு கருத்தமைவில் அவர் தமது மரணத்தின் பலன்களை ஏற்றுக்கொள்பவர்களுக்காக மாத்திரம் மரித்தார். பிந்திய இந்த அர்த்தம்தான் இவ்விடத்தில் கண்ணோக்கத்திற்குள் இருக்கிறது. [6]செப்துவஜிந்த் அல்லது LXX என்பது பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பாகும். [7]ரோமர் 8:32ல் "*சொந்த* என்பது ஒரு விசேஷித்த உறவுமுறையைச் சுட்டிக்காண்பிக்கிறது," இது மகனென்ற முறையில் "கிறிஸ்து கொண்டுள்ள உரிமையிலிருந்து நாம் கொண்டுள்ள உரிமையைச்" சிறப்பித்துக் காண்பிக்கிறது (Leon Morris, *The Epistle to the Romans* [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988], 335, n. 149). [8]Octavius Winslow, *No Condemnation in Christ Jesus* (N.p., 1857), 324; quoted in Stott, 255. [9]இவ்விடத்தில் ஆங்கிலப்பிரதியிலுள்ள "Anthropomorphism" என்ற சொல்லானது தேவன் மனிதப் பண்புகளைக் கொண்டிருத்தல் போன்று அவரைப்பற்றிப் பேசுதலாக உள்ளது. வேதாகமம் அடிக்கடி இவ்வகையான ஒத்துப்போகும் இயல்புள்ள மொழி நடையைப் பயன்படுத்தி, தேவனுடைய "முகம்," "கண்கள்," மற்றும் "கரங்கள்" பற்றிப் பேசுகிறது. [10]G. C. Brewer, *Christ Crucified: A Book of Sermons* (N.p., 1928; reprint, Nashville: B. C. Goodpasture, 1952), 53.

[11]தேவன் தமது குமாரனாகிய இயேசு இன்றியோ அல்லது தனிப்பட்ட வகையிலோ நம்மை ஆசீர்வதிப்பதில்லை. எல்லா ஆசீர்வாதங்களும் இவ்விருவர் வழியாகவே வருகின்றன. [12]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 196. [13]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, 1971), 113. [14]Moo, 282. [15]Jim McGuiggan, *The Book of Romans,* Looking Into The Bible Series (Lubbock, Tex.: Montex Publishing Co., 1982), 266. McGuiggan noted that this is a major point made by Paul in Romans 14. [16]"யார்" என்பது, *tis* என்ற கேள்விவடிவ பிரதிப்பெயர்ச்சொல்லிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இதே வார்த்தை இந்த எடுத்துரைப்பில் முக்கியத்துவப் படுத்தப்பட்டுள்ள மற்ற இரு கேள்விகளிலும்கூட பயன்படுத்தப்பட்டுள்ளது. வழக்க மாக, "யார்" என்பது விஷயங்களையல்ல, ஆனால் மக்களைக் குறிப்பிடுவதாக இருக் கிறது; ஆனால் பவுல் இந்தக் கேள்வியைத் தொடர்ந்து, *மக்களையல்ல* ஆனால் *விஷயங்களையே* பட்டியலிட்டார். *Tis* என்பது "யார்" என்பதற்குப் பதிலாக "எது" என்று மொழிபெயர்க்கப்பட வேண்டியது என்பது சாத்தியமானதாகவே உள்ளது. பட்டியலிடப் பட்டுள்ள இடர்ப்பாடுகளில் பெரும்பாலானவற்றில், மக்களே *செயல்முனைப்புள்ள முகவராக* இருக்கின்றனர் என்று பவுல் மறைமுகமாய் உணர்த்தியிருக்கவும் சாத்தியம் உள்ளது. [17]Fritz Ridenour, ed., *How to Be a Christian Without Being Religious* (Glendale, Calif.: Regal Books, G/L Publications, 1967), 74. [18]இந்த விவரிப்பானது, 26 டிசம்பர் 2004ல் ஆக்லஹாமாவின் மத்திய மேற்கு நகரிலுள்ள கிழக்குப் பகுதி கிறிஸ்துவின் சபையில் ஒரு வேதாகம வகுப்பில் மெல் ஸ்டின்னெட் என்பவரால் பயன்படுத்தப்பட்டது.